**சுருக்கம்**

பொதுப்பணிகள் – சிறைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணையடிப்படை பணிநியமனம் – திருமதி சா.மாலதி த/பெ. (காலம் சென்ற) திரு.பி.சாமி, இரண்டாம் நிலைக் காவலர், கோவை மத்திய சிறையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – அன்னாரின் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

---

**உள் (சிறை.2) துறை**

**அரசாணை (3ப) எண்.67** **நாள்: 21.12.2020.**

**(சார்வரி, மார்கழி–06, திருவள்ளுவர் ஆண்டு – 2051)**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவரின் கடித எண்.13569/இஎஸ்.2/2017, நாள் 14.01.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.

-----

**ஆணை:–**

திரு.பி. சாமி என்பவர் கோவை மத்திய சிறையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணியாற்றி வந்த நிலையில் 13.05.2003 அன்று இறந்துவிட்டதால், அவருடைய மகள் சா.மாலதி என்பவர், தனக்கு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் கோரி விண்ணப்பித்திருந்தார். அதனடிப்படையில் திருமதி சா.மாலதி அவர்கள் சிறைத்துறையில் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக 09.10.2017 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டார். அன்னார் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய பிறந்த தேதி 15.03.1987. கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதால் அவரது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, திருமதி சா.மாலதி அவர்கள் தற்காலிக இளநிலை உதவியாளராக சிறைத்துறையில் 09.10.2017 முற்பகல் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். எனவே, திருமதி சா.மாலதி என்பவருடைய பணியினை அவர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 09.10.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்ய சிறைத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்

(த.தி.பா.)

2. இந்நிகழ்வில் சம்பந்தப்பட்ட தனியர் கருணையடிப்படையில் பணி நியமனம் கோரி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார். அவ்வாறு விண்ணப்பித்த நாளில், தனியர் 18 வயது பூர்த்தி செய்துள்ளார். கருணையடிப்படையில் பணிநியமனத்திற்கான உரிய கல்வி மற்றும் இதர தகுதிகளை நிறைவு செய்ததன் காரணத்தால் திருமதி சா.மாலதி தற்காலிக இளநிலை உதவியாளராக 09.10.2017 முற்பகல் முதல் சிறைத்துறையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆனால், அன்னாரின் பணி நியமனத்திற்கு முன்பே, அவருக்கு திருமணமாகியுள்ளது.

3. எனவே, காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவரின் பரிந்துரையை ஏற்று, சிறைத்துறையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திருமதி சா.மாலதி என்பவர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவு 58–ன் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து, அவரது பணியினை09.10.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்த அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேற்கண்டவாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அன்னாருக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அ.சா.எண். 19706/க்யூ.1./2020–1, நாள் 04.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 32606/ஜி2/2020–1, நாள் 08.11.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எஸ்.கே.பிரபாகர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
காவல் துறை இயக்குநர்/ தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்த்திருத்த பணிகள் துறை, சென்னை–8.
திருமதி சா.மாலதி, இளநிலை உதவியாளர்,
மத்திய சிறை , கோவை (காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் மூலமாக).
முதன்மை மாநில கணக்காயர், சென்னை –18.
மாவட்ட கருவூல அலுவலர், கோவை.

**நகல்:**
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

31.12.20
**பிரிவு அலுவலர்**